# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2041 (மார்கழி – தை) ஜனவரி 2011 ஏர்-26, உழவு-1, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : பரணி கே.பாலசுப்பிரமணி |
| துணைத்தலைவர்கள் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : ஆர். செல்வராஜ் |
| இணைச்செயலாளர்கள் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>Dr.கே.ஆர்.பி.சண்முகம் |
| பொருளாளர் | : கே.கே. ரமேஷ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| கே.ஏ.கணபதி | வி.பி.வீரப்பன் |
| கே.ராஜாமணி | ஆர்.இளங்கோ |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.ரவி |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | பி.அருள் |
| ஆர். சண்முகவேல் | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| எம். கார்த்திக் | எம்.அமராபதி |

## இந்த இதழில்

| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| கட்டிட நிதி | - | 3 |
| செயலாளர் அறிக்கை | - | 4 |
| மாற்றமே முன்னேற்றம் | - | 5 |
| செயற்குழு உறுப்பினர்கள் | - | 6 |
| கரூர் மாநாடு | - | 9 |
| தோட்டக்கலை | - | 10 |
| கொங்கு நாட்டுத்தங்கம் | - | 11 |
| மணமகள் தேவை | - | 16 |
| மருத்துவம் | - | 17 |
| உணவுகள் | - | 18 |
| கிரைகளின் அரசன் | - | 20 |
| கிராமத்தின் கதை | - | 21 |
| வாழ்த்துகிறோம் | - | 23 |
| வரலாறு | - | 25 |
| மணமகள் தேவை | - | 26 |
| மணமகன் தேவை | - | 30 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்.



ஸ்ரீ விக்ருதி வருடம் 2011 ஆம் ஆண்டு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பொன்விழா காணயிருக்கிறது. இவ்வளவு பழமைவாய்ந்த சங்கம் சிறிதும் அரசியல் கலப்பில்லாத கொங்கு சமுதாய மக்களின் நலனுக்காகப் பாடுபட்டு வருகின்ற அமைப்பாக சீரும் சிறப்புமாக செயல்பட்டு வருகிறது.

கடந்த 2010 ஆம் ஆண்டு நமது சங்கம் செய்த சில சாதனைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவதாக, சென்னை இராயப்பேட்டை பீட்டர்ஸ் சாலையில் புதியதாக அமைந்துள்ள தீரன் சின்னமலை மாளிகை கட்டிட திறப்புவிழா கண்டது. இரண்டாவதாக, தீரன் சின்னமலை பிறந்த நாள் விழாவை அரசு விழாவாக அறிவித்து சென்னை கிண்டியிலுள்ள தீரன் சின்னமலை திருவுருவச்சிலைக்கு துணை முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தது. மூன்றாவதாக, தமிழக அரசை சாதிவாரி கணக்கெடுப்பு நடந்த வலியுறுத்தி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் சார்பாக நான் கலந்து கொண்டு தமிழக முதல்வரைச் சந்தித்துக் கோரிக்கை வைத்தது. நான்காவதாக, கொங்கு நாடு அறக்கட்டளையிடமிருந்து தீரன் சின்னமலை மாளிகையின் 50 சதவிகித பங்கை வாங்கி மாளிகையைச் சங்கத்தின் பேரில் பதிவு செய்தது.

வரும் பிப்ரவரி மாதத்திலிருந்து தீரன் சின்னமலை மாளிகை கொங்கு மக்களின் பயன்பாட்டிற்குத் தயாராகி வருகிறது. தொழில் சம்பந்தமாக வெளியூரிலிருந்து சென்னை வரும் கொங்கு மக்களும் சென்னையில் உள்ள கொங்கு உறுப்பினர்களும் இதில் தங்கி பயனடையுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நவீன வசதிகள் கொண்ட அறைகள் குறைந்த வாடகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டில் நமது சங்கம் மேலும் பல சாதனைகளை நிகழ்த்திடவும், நிதி நிலையை வலுப்படுத்தி வசதியற்ற நமது சமுதாய மாணவர்களுக்கு உதவிடவும், வேலை தேடும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சியும், ஆலோசனையும் வழங்கி கைதூக்கிவிடவும் உங்கள் அனைவரின் அன்பான ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

பொங்கல் திருநாள் தமிழர் திருநாள். அனைவருக்கும் இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துகளையும், இனிய பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

பரணி கே. பாலசுப்பரமணி

தலைவர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 61,51,683 |
| 1156 | 2709 | K.செந்தில்குமார் | 1,000 |
| 1157 | 2707 | P.ராஜா | 1,000 |
| 1158 | 1546 | P.K.ராமசாமி | 1,000 |
| 1159 | 1416 | M.பொன்னுசாமி | 1,000 |
| 1160 | 3317 | M.K.பொன்னுசாமி | 1,000 |
| 1161 | 492 | M.பழனிசாமி | 1,000 |
| 1162 | 597 | P. கோபாலசாமி | 1,000 |
| 1163 | | T.S.செல்வராஜ் | 1,000 |
| 1164 | | சசிகுமார் | 1,000 |
| 1165 | | A.ராஜா | 1,000 |
| 1166 | | P. சத்தியபிரபு | 1,000 |
| 1167 | | T.C. வெங்கடாச்சலம் | 1,000 |
| 1168 | | S.மோகன் | 1,000 |
| 1169 | | R.வெங்கடேஷ்வரன் | 1,000 |
| 1170 | | S.P.S.ராஜா | 1,000 |
| 1171 | | ராச பூபதி | 1,000 |
| 1172 | | S.சந்திரசேகரன் | 1,000 |
| 1173 | | K.துரைசாமி | 1,000 |
| 1174 | | K.ராகேஷ் | 1,000 |
| 1175 | | S.N. நித்தியானந்தன் | 1,000 |
| 1176 | | கண்ணன் | 1,000 |
| 1177 | | P. நந்தினி தேவி | 1,000 |
| 1178 | | விஜய பாரதி | 1,000 |
| 1179 | | M. சுப்பையன் | 1,000 |
| 1180 | | A.V. சம்பத் | 1,000 |
| 1181 | | K. தேவராஜன் | 1,000 |
| 1182 | 173 | R. செல்லதுரை | 1,000 |
| 1183 | | S. பிரபாகர் | 1,000 |
| 1184 | | P. ரோகிணி | 1,000 |
| 1185 | | S. கிருத்திகா | 1,000 |
| 1186 | | Dr. V. முத்து செல்வம் | 1,000 |
| 1187 | | Dr. கே.அன்பழகன் | 3,000 |
| | | மொத்தம் | 61,85,683 |

# செயலாளர் அறிக்கை

அன்பு கொங்குச் சொந்தங்களுக்கு,



வணக்கம். அனைத்து சொந்தங்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துகளையும், இனிய பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 2010 ஆம் ஆண்டு சங்கத்திற்கு நன்கொடையளித்த பேருள்ளங்களுக்கும், கொங்குச் சமுதாயம் ஈகை, கொடையுள்ளம் ஆகிய சிறந்த பண்புகளுக்குப் பெயர் பெற்றது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் இதுவரை நன்கொடையளித்த கொங்குக் கொடையாளிகளுக்கும் என் மனம்நிறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது தீரன் சின்னமலை மாளிகையின் அறைகள் வரும் பிப்ரவரி முதல் வாரத்தில் நடைமுறைக்கு வரயிருக்கிறது. ஓர் அறைக்கு நாள் ஒன்றுக்கு உறுப்பினர்களுக்கு ரூ. 950/– எனவும், உறுப்பினர் அல்லாதவர்களுக்கு ரூ. 1,250/– எனவும் கடந்த செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்துள்ளது. நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் தீரன் சின்னமலை மாளிகையை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தீரன் சின்னமலை மாளிகை நன்கொடை அனுப்பாத உறுப்பினர்கள் புத்தாண்டில் முதல் நல்ல காரியமாக, சங்கத்திற்கு நன்கொடையனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். பிறருக்காக வாழ்வதே வாழ்க்கை. கொங்குச் சொந்தங்களில் இல்லார்க்கு உதவிட, தங்கள் நன்கொடை பெரிதும் உதவும். சங்கப் பணிகள் சிறக்க, தங்களின் நன்கொடையே நீங்கள் செய்யும் சமுதாயத் தொண்டாகும்.

சங்க நிதி நிலை குறைவாக உள்ள இந்த நேரத்தில் தாங்கள் அனுப்பும் ரூ. 1000/– சங்கத்தை நடத்த உதவியாக இருக்கும். இதுவரை நன்கொடை அளிக்காத நண்பர்கள் விரைந்து அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி !

ஆர். செல்வராஜ்
செயலாளர்

❖❖❖❖❖

# மாற்றமே... முன்னேற்றம்

நாளும் மாறும் தொழில் நுட்பத்திற்கேற்ப நாமும் மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். எனவே உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ளும் முறையிலும் மாற்றங்களைச் செய்ய சங்கத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்திலும் நமது சமுதாயத்திலும் நடைபெறும் நிகழ்வுகள் பற்றிய விபரங்களை குறுந்தகவல்கள் (SMS) மூலம் உறுப்பினர்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்த எண்ணியுள்ளோம்.

**நீங்கள் செய்ய வேண்டியது என்ன ? :**

உங்கள் அலைபேசியில் இருந்து கீழே குறிப்பிட்டவாறு ஒரே ஒரு SMS அனுப்பவும். (KNS) (உங்களுடைய 4 இலக்கு எண்) (உங்களுடைய அலைபேசி எண்)

(உதாரணம்) KNS - 1234 - 98400 98400

**அனுப்ப வேண்டிய எண்**

**98840 - 22266**

**பரிசு :**

SMS - அனுப்பும் கொங்கு நண்பர்களின் எண்களைச் சங்கத்தின் பதிவேட்டில் பதிவு செய்தபின், குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்பட்டு மூன்று நண்பர்களுக்கு அழகிய கைக் கடிகாரம் பரிசாக வழங்கப்படும்.



**குறிப்பு :** முடிவுகள் SMS மூலம் தெரிவிக்கப்படும். SMS-ல் கொடுக்கப்பட்ட எண்ணைத் தொடர்பு கொண்டு பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

# செயற்குழு உறுப்பினர்கள்

## 1. S. சிவசாமி

கோவை டாடாபேட் பகுதியில் வசித்துவரும் திரு. S. சிவசாமி, சேரன் கூட்டத்தைச்



சேர்ந்தவர். 43 வயது நிரம்பிய, D.C.E. பட்டம் பெற்றுள்ள இவருடைய தந்தை பெயர் திரு.சென்னிமலை கவுண்டர். தாயார் தெய்வத் திருமதி சின்னம்மாள். கட்டுமானத் தொழில் மற்றும் ஜவுளித் தொழில் செய்து வருகின்ற திரு. சிவசாமி அவர்களின் மனைவி திருமதி சுமதி. மகள் S. கீர்த்தனா மற்றும் மகன் S. பிரகதீஸ்வரன் இருவரும் பள்ளியில் படித்து வருகின்றனர். இவர் இரண்டாவது முறையாக செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## 2. Dr. T.S. செல்வராஜ்

ஈரோடு மாவட்டம், திங்களூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. T.P. சாமியப்பன் – திருமதி



சுப்பாயாள் ஆகியோரின் மகனான டாக்டர் T.S. செல்வராஜ் M.B.B.S பட்டம் பெற்றவர். 61வயது நிறைந்த இவர் மணியன் கூட்டத்தைச் சேர்ந்தவர். சேலம் ஸ்ரீ கோகுலம் மருத்துவமனையின் இயக்குநராகவும், கோவை, திருச்சி மற்றும் ஹுப்ளி ஆகிய நகரங்களில் CT Scan, MRI போன்ற அதிநவீன மருத்துவக் கருவிகள் கொண்ட மருத்துவப் பரிசோதனை நிலையங்களின் நிர்வாக இயக்குநராகவும் உள்ள இவரின் மனைவி திருமதி உமாராணி சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர். சிறந்த சமூக சேவகி. இத்தம்பதியரின் இரண்டு மகள்களும் திருமணமானவர்கள்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் 2008–2010 ஆண்டுகளின் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றிய டாக்டர் செல்வராஜ் அவர்கள், இந்திய மருத்துவச் சங்கத்தின் சேலம் நகரத் தலைவராகவும், தமிழ் மாநிலத் துணைத் தலைவராகவும், மத்திய செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்துள்ளார். மத்திய சேலம் ரோட்டரி சங்கத் தலைவராகவும், சேலம் கிளப் செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார். இரண்டாவது முறையாக செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## 3. S. அன்பழகன்

தருமபுரி மாவட்டம் பொம்மிடி என்ற ஊரைச் சேர்ந்தவர் திரு. S. அன்பழகன். திரு.P.செம்பராயக் கவுண்டர் – திருமதி பார்வதி ஆகியோரின் புதல்வரான இவர் விளியன் கூட்டத்தைச் சேர்ந்தவர். பி.எஸ்சி. பட்டப் படிப்பு படித்தவர். கட்டுமானத்



தொழில் மற்றும் நில வியாபாரம் செய்துவரும் இவரின் மனைவி பெயர் சந்திரலேகா. மகன்கள் மதன் கார்த்திக், கவின் கார்த்திக் இருவரும் மென்பொருள் பெறியாளர்களாக உள்ளனர். இவர் முதன்முறையாக செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

**4. C. சருவராஜன்**

வயத 41, காடைகூட்டம், இவர் நாமக்கல் மாவட்டம் மோகனூர் ஒன்றியம் கங்காநாயக்கன் பட்டி என்னும் கிராமத்தில் பிறந்தவர். இவர் கடந்த 8 ஆண்டு காலமாக சென்னை கொளத்தூரில் SRBT Trailers Service என்ற பெயரில் ட்ரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறார். இவருக்கு ஹரிப்பிரியா (13 வயது) என்ற மகளும், தமிழ் செல்வன் (11 வயது) என்ற மகனும் இருக்கின்றார்கள். இவர் முதன் முறையாக செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



**5. M.S. இராஜேந்திரன்**

திரு A. முத்துக் கவுண்டர் – திருமதி சிவகாமி ஆகியோரின் மகனான திரு.M.S.இராஜேந்திரன் நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டம் ஜேடர்பாளையம். தொப்பம்பட்டியில் பிறந்தவர். 43வயது நிரம்பிய இவர் படித்தது பத்தாம் வகுப்பு மட்டுமே. ஆனால் அனுபவ அறிவு நிறையப் பெற்றவர். விழியன் குலத்தைச் சேர்ந்த இவர் N.R.CO (Civil Engr. Contrectors), PET Promoters Private Ltd, Hareeni Earth Movers ஆகிய நிறுவனங்களின் உரிமையாளராவார். இவருடைய மனைவி மகேஸ்வரி, B.Sc., மகன் R.சங்கீத் குமார் எட்டாம் வகுப்பிலும், மகள் R. ஹரீணிஸ்ரீ மூன்றாம் வகுப்பிலும் D.A.V. Sr. Secondary School - ல் படித்து வருகின்றனர். முதன்முறையாக செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



**6. திரு. K.N. தர்மராஜ்**



ஈரோடு மாவட்டம் கோபிவட்டம் நாதிபாளையம் பஞ்சாயத்து சங்கம் பாளையத்தில் வசிக்கும் திரு. k.K. நாச்சிமுத்து மற்றும் K.N. பழனிஅம்மாள் அவர்களுக்கு மகனான இவர் பண்ணை கூட்டத்தைச் சேர்ந்தவர். இவருடைய குலதெய்வம் காளியம்மன்.

M.Sc கணினி பொறியியல் துறையில் பட்டம்பெற்று. சென்னையில் Software Engr. ஆக கம்பெனியில் பணியாற்றுகீறார்.

கொங்குச் சமுதாயப்பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் முதல்முறையாக செயற்குழு உறும்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**7. முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்**

நாமக்கல் மாவட்டம் சிவியாம்பாளையம் தமிழறிஞர் முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் – தெய்வத் திருமதி செல்லம்மாள் ஆகியோரின் மகளாகப் பிறந்தவர்



இவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. மற்றும் பி.எச்டி. (தமிழ்) பட்டங்கள் பெற்றவர். கணவர் தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியைச் சேர்ந்த பொறியாளர் திரு. நா. புஷ்பராஜ். இத்தம்பதியரின் மகன் திரு.கிருபா புஷ்பராஜ் அமெரிக்கா கலிபோர்னியாவில் காப்புரிமை சட்ட வல்லுனராகப் பணியாற்றுகிறார். கொங்கு வேளாளர் திருமணச் சடங்குகள், தருமபுரி மாவட்டத்தில் கொங்கு வேளாளர், கொங்குமாவீரன் தீரன் சின்னமலை உட்பட பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள இவர் தொகுத்த சிலம்பொலியார் அணிந்துரைகள் தமிழக அரசின் பரிசு பெற்றது. இதுவரை 250 க்கும் மேற்பட்ட ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கியும், 12 நூல்களை பதிப்பித்து வெளியிட்டுமுள்ள பாவேந்தன் நினைவு அறக்கட்டளையின் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். இவர் செயற்குழு உறுப்பினராக நியமிக்கப் பட்டிருப்பது ஆறாவது முறையாகும்.

**8. திருமதி உத்தமி பொன்னுசாமி**

திருமதி உத்தமி பொன்னுசாமி அவர்கள் கரூர் மாவட்டம் க. பரமத்தியில் 07–10–47இல் திரு. கடையீஸ்வரன் – திருமதி பொன்னாத்தாள் தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தவர். புலவர் பட்டம் பெற்று, சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் M.A. முடித்து, 30 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பன்முறை செயற்குழு உறுப்பினராக இருந்து பணியாற்றியவர்.



இவரது கணவர் K.P பொன்னுசாமி அவர்கள் ஆடிட்டர் சங்கப் பொருளாளராக இருந்துள்ளார். இவருக்கு பாலாஜிகுகன் B.A., L.L.B., என்ற மகனும், சக்தி அம்பாலிகை M.Com., C.A., என்ற மகளும் உள்ளனர். இவர் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறார். பட்டிமன்றப் பேச்சாளராகவும் இருந்து வருகிறார். தமிழ்ப்பணி, சமுதாய சேவை மற்றும் சமூக சேவை ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறார்.

❖❖❖❖❖

# கரூர் மாநாடு

கொங்குநாடு முன்னேற்றக் கழகத்தின் சார்பில் விவசாயிகள் அரசியல் உரிமை மாநாடு கடந்த டிசம்பர் 19 – ஆம் தேதி அன்று கரூரில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டில் கொங்கு முழுவதுமிருந்து இலட்சக்கணக்கான சொந்தங்கள் ஆர்வத்தோடு கலந்துக்கொண்டனர். கரூர் நகரமே விழாக் கோலம் கொண்டிருந்தது.

மாநாட்டில் சங்கத்தின் சார்பில் தலைவர் திரு. பரணி கே.பாலசுப்பிரமணி, செயலாளர் திரு. ஆர்.செல்வராஜ், பொருளாளர் திரு. கே.கே.ரமேஷ் மற்றும் பெரும்பாலான செயற்குழு உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர். இந்த மாநாட்டிற்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்க தலைவர் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி அவர்கள் ரூ. 10 லட்சம் நிதி வசூல் செய்துக்கொடுத்தார். சுமார் பல லட்சம் மக்கள் கலந்துக்கொண்ட இந்த மாநாட்டை தமிழகமே திரும்பி பார்க்கும் அளவிற்கு மக்கள் வெள்ளம் கூடியிருந்தது.

மாநாட்டில் காலை முதல் கலைநிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக நடைப்பெற்றது. விவாசயம் சம்பந்தப்பட்ட பொருட்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது. அதில் காங்கேயம் காளை, விதைகள் போன்ற அரங்குகள் விவசாயிகளுக்கு மிகவும் பயன்படும் வகையில் அமைந்திருந்தது. கொங்கு வேளாளர் சமுதாயத்திற்கு நிச்சயம் அரசியல் உரிமை கிடைக்கும் என்பதை உணர்த்தும் விதமாக தலைவர்களின் பேச்சி அமைந்திருந்தது. விழாவில் அமரர் கோவை செழியன் அவர்களின் மகன் மற்றும் மகள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை மாநாட்டுக்குழு தலைவர் கரூர் திரு. சக்தி கோச் நடராஜன் அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

❖❖❖❖❖

# தோட்டக்கலைப் பயிர்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி

கே.கே.சோமசுந்தரம் IFS (ஓய்வு)
(முன்னாள் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்)

இப்படியாகப் பற்பல வகைகளில் விவசாயி கஷ்டங்களுக்குத் தள்ளப்படுகிறான். வங்கிகள் குறைந்த வட்டியில் தாராளமாகக் கடன் கொடுத்தாலும் அதைத் திருப்பிக் கட்ட வழி இருப்பதில்லை. தள்ளுபடிக்காக எப்பொழுது தேர்தல் வரும் என எதிர்பார்த்துக் கொண்டுள்ளார்கள். இந்த நிலை ஆரோக்கியமானது அல்ல. இருப்பினும் அவனால் ஒன்றும் செய்ய முடிவதில்லை.

மா, தென்னை, நெல்லி, சப்போட்டா, கொய்யா ஆகிய தோட்டக்கலைப் பயிர்களிலும் பெரிய இலாபங்களைப் பெற முடிவதில்லை. இந்த எல்லா பழப் பயிர்களிலும் இடைத்தரகர்களின் விளையாட்டு வேறு உள்ளது. தென்னையை எடுத்துக் கொண்டால், பல்லாண்டு மரப்பயிராக இருந்தாலும், சில பகுதிகளில் தான் நல்ல தரமான காய்களைப் பெற முடிகிறது. காரணம் மழை மற்றும் சீதோஷ்ண நிலையின் தாக்கம். (உ.ம். பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, கம்பம், தேனி, கன்னியாகுமரி பகுதிகள்)

தமிழ்நாட்டின் வேறு மாவட்டங்களில் காய்ப்பு இருந்தாலும் காய்களின் அளவு மற்றும் எண்ணிக்கை குறைவாகத்தான் உள்ளது. மேலும் சராசரியாக 100 காய்களுக்கு மேல் காய்ப்பதில்லை. இதையெல்லாம் விட தேங்காய் பறிக்க ஆள் பிரச்சனை நாளுக்கு நாள்அதிகமாகி வருகிறது. காரணம் தேங்காய் பறிக்கும் தொழிலில் இதுநாள் வரை ஈடுபட்டிருந்தவர்கள் கடந்த பத்து ஆண்டுகளாக படிப்படியாகக் குறைந்து தற்போது 45, 50 வயதானவர்கள் தான் அதிகமாக உள்ளனர்.

சுமார் 5, 10 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆட்களே இல்லாத நிலை ஏற்படலாம். அவர்களின் வாரிசுகள் எல்லாம் மாற்று வேலைக்குச் சென்றுவிட்டனர். ஒரு தேங்காய் பறிக்க 50 பைசா முதல் 70 பைசா வரை கேட்கிறார்கள். இது தேங்காயில் மூன்றில் ஒரு பங்கு விலையாகிறது. பொள்ளாச்சி, உடுமலை போன்ற பகுதிகளில் இரண்டு மூன்று மூங்கில்களை ஒன்று சேர்த்துக் கட்டி தேங்காய் பறிக்கின்றனர். அதுவும் 40அடி உயரம் வரை தான் முடியும். மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் போல குரங்குகளுக்குப் பயிற்சி கொடுக்கும் நாள் நீண்ட தூரத்தில் இல்லை.

❖❖❖❖❖

# வரலாற்றில் மறைக்கப்பட்ட கொங்கு நாட்டுத் தங்கம்

**சி.க. கருப்பண்ணன் இ.சு.க.ப (ஓய்வு)**

இன்றைக்கு (04.12.2010) சரியாக 84 ஆண்டுகளுக்கு முன் அன்றைய சென்னை மாகாணத்தில் முதல் அமைச்சராக பதவி ஏற்ற முதல் தமிழன் என்ற பெருமைக்கு உரியவர் கொங்கு நாட்டுத் தங்கம் – முனைவர் ப. சுப்பராயன். அவர் பதவியில் அமர்ந்த நாள் 04.12.1926. அவருக்கு அப்போது வயது 37தான்.

இன்றைக்கு 121 ஆண்டுகளுக்கு முன்பு (11.09.1889) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டை அடுத்த குமாரமங்கலம் ஜமீனுக்கு உட்பட்ட போக்கம்பாளையத்தில் தூரன் குலம் பெரிய பரமசிவ கவுண்டர் – பாப்பாயி அம்மாள் தம்பதியர் 16 ஆண்டு தவமிருந்து பெற்றெடுத்த ஒரே மகன் ப. சுப்பராயன்.

ஜமீன் வாரிசு தகராறு இருந்த சூழ்நிலையில் பெரிய பரமசிவ கவுண்டர் மர்மமான முறையில் ஒரு விபத்தில் இறந்ததால் சுப்பராயன் தன் 8 – வது வயதில் தன் தந்தையை இழந்தார். பாதுகாப்பு கருதி ஆங்கிலேய அரசு அவரைத் தங்கள் பொறுப்பில் சென்னையில் படிக்க வைத்தது.

மேற்படிப்புக்காக இலண்டன் சென்ற ப. சுப்பராயன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பண்டித நேருவின் வகுப்புத் தோழராகவும், சட்டப்படிப்பு படிக்கும்போது டப்ளின் பல்கலைக்கழகத்தில் அம்பேத்காரின் வகுப்புத் தோழராகவும் இருந்தார். டாக்டர் பட்டம் பெற்ற முதல் தமிழர் என்ற பெருமை இவருக்கு உண்டு. இம்மூன்று பேர்களும் இந்திய அரசியலில் தனி முத்திரை பதித்த மாமனிதர்கள்.

சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்ற சுப்பராயன் தாய்நாடு திரும்புவதற்கு முன் முதல் உலகப்போர் நடந்து கொண்டிருக்கும்போது பிரிட்டிஷ் பிரதமரின் தனிச் செயலாளராக நியமிக்கப்பட்ட முதல் தமிழர் என்ற பெருமை பெற்றவர். இது வருங்காலத்தில் அவர் மாபெரும் சாதனைகள் பல நிகழ்த்தவிருந்ததற்கு முன்னோடியான ஓர் அடையாளம் எனலாம்.

சுதந்திரத்திற்கு முன் அமைந்த முதல் இரண்டு மந்திரி சபைகளிலும் ஆந்திரர்களே முதலமைச்சர்களாகவும் மற்ற அமைச்சர்களாகவும் இருந்தனர். முனைவர் ப. சுப்பராயன் முதலமைச்சர் பதவி வகித்த முதல் தமிழர் என்பது மட்டுமல்லாமல் அவரது அமைச்சரவையில் 3 தமிழர்களை நியமித்தவர் என்ற சிறப்பும் பெற்றவர்.

பொது வாழ்வில் (அரசியலில்) 40 ஆண்டுகளுக்கு மேலாக பல துறைகளில் நிர்வாகத் திறமையோடு நேர்மையாகவும், நியாயமாகவும் நடந்து கொண்டவர். மாற்றாரை மதிக்கும் மனிதப்பண்பு கொண்டு விளங்கியவர். பணிவுடனும், கனிவுடனும்

சகிப்புத்தன்மையுடனும் பலருடன் பழகிய பண்பாளர். அதனால் மாற்றாரும் இவரை வெகுவாக மதித்ததை அனைவரும் அறிவர். அவர் சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும், கல்வி, சட்ட அமைச்சராகவும் மத்தியில் தகவல் தொடர்பு, போக்குவரத்து அமைச்சராகவும் (மொத்தம் 14 ஆண்டுகள்), மேலும் மாநில ஆளுநராகவும், அயல்நாட்டில் தூதுவராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தபோதும் கறைபடாத கரத்திற்குச் சொந்தக்காராக இருந்தவர். எதிர்க்கட்சிகள் வாழ்நாளில் அவர்மீது ஊழல் புகார் எதுவும் கூறவில்லை. இந்திய அரசியலிலும் தமிழ்நாட்டு அரசியலிலும் அரிதில் காணமுடியாத வியத்தகு மனிதராக விளங்கியவர்.

பல்லாண்டுகள் பெரிய பதவிகளில் இருந்த போதிலும் தனக்கும் தன் குடும்பத்திற்கும், பேரப்பிள்ளைகளுக்கும் சொத்துக் குவித்திடாத சொக்கத் தங்கம் சுப்பராயன். அதே நேரத்தில் தானே ஜமீன் ஒழிப்புத் திட்டத்தைக் கொண்டுவந்து நடைமுறைப்படுத்தியதில் 40,000 ஏக்கர் ஜமீன் நிலத்தையும் தனக்குச் சொந்தமான 160 ஏக்கர் நிலத்தையும் அரசிடம் ஒப்படைத்ததும், சென்னையில் தனக்குச் சொந்தமான இடங்களைப் பொது அமைப்புகளுக்குக் கொடுத்துவிட்டு தானும் தன்குடும்பமும் வாடகை வீட்டில் குடியிருந்த தியாக செம்மலின் பொது வாழ்வின் தூய்மைக்கு இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்?.

தான் அரசியலில் ஆரம்பத்தில் காங்கிரஸ் இயக்கத்திலும், பின்னர் சுயேட்சையாகவும், இறுதிக் காலத்தில் காங்கிரசிலும் இருந்தவர். அவர் சுயேட்சையாக முதலமைச்சர் பதவி வகித்த காலத்தில் ஒரு காந்தியவாதியாகவும், அதே சமயத்தில் ஒரு சுயமரியாதைக்காரராகவும் விளங்கியவர். அதனால்தான் தந்தை பெரியார் 1937–ல் செங்கல்பட்டில் கூட்டிய சுயமரியாதை மாநாட்டினை முனைவர் சுப்பராயனைக் கொண்டு திறக்க வைத்தார். 1930–ல் காந்தி அடிகளின் உப்பு சத்தியாகிரகத்தின்போது ராஜாஜி தலைமையில் நடந்த வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தை திருச்சியில் தொடங்கி வைத்தவர் முனைவர் சுப்பராயன்தான் என்பது வரலாறு.

இப்படி மாறுபட்ட அமைப்புகள் சுப்பராயனை மதித்துப் போற்றியதன் காரணம் அவர் ஜாதியை மறுத்துக் கலப்புத் திருமணத்தைச் செய்து கொண்டவர். தன் குடும்பமே (மகன்கள் – மகள்) சாதி மறுப்புத் திருமணம் செய்தது போல வேறெங்கும் காண்பது அரிது. சுயமரியாதைக் கொள்கைகளான தேவதாசி முறையை ஒழிக்க சட்டம் கொண்டு வந்ததும் , வகுப்புவாரி இடஒதுக்கீடு சட்டம் கொண்டுவந்து நடைமுறைப்படுத்தியதும், கோயில் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த அறநிலைய சட்டத்தைக் கொண்டுவந்ததும், காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றித் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயத்தில் நுழைவதற்குச் சட்டம் கொண்டு வந்து தானே முன்னின்று

ஆலயத்திற்குள் சென்றதும், மதுவிலக்குச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவந்து, முழு மதுவிலக்கு நடைமுறைப்படுத்தியதும், தமிழ்நாட்டில் பள்ளிகளில் 1937வாக்கில் இந்தியைப் பாடமாகக் கொண்டுவந்ததும், பின்னர் இந்தியை அவரே கற்றபின் ஹிந்தி பொது ஆட்சி மொழியாக வருவதற்கு இன்னும் தகுதி பெறவில்லை என்றும், தமிழும் ஆங்கிலத்தோடு 3–வது ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று ஆட்சிமொழிக் குழுவில் பதிவு செய்து முழக்கம் இட்டவர் சுப்பராயன். அந்தந்த மக்கள் விரும்பும்வரை இந்தி கட்டாயமாக்கப்படமாட்டாது என்று நேரு வாக்குறுதி கொடுப்பதற்கு முனைவர் சுப்பராயனின் இந்த முழக்கமும் ஒரு காரணம் எனலாம்.

சுப்பராயன் தமிழ், தமிழ்நாடு மேல் காட்டிய பற்றுதலுக்கு கட்டியம் கூறுபவை இவையே. அவர் டில்லி பாராளுமன்றத்தில் திருவள்ளுவர் படம் திறக்க வைத்ததும், திருவள்ளுவர், பாரதி படங்களை அஞ்சல் தலையில் வெளியிட்டதும், தமிழ்ப்பெருமக்களை இந்தியா முழுவதும் அடையாளம் காட்டிய அருஞ்செயலாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொடங்க ரூ. 27,00,000/– நிதி ஒதுக்கி, தமிழ் வளர்க்க அடித்தளம் அமைத்த அறிஞர். ஆந்திராவில் ஆந்திரப் பல்கலைக்கழகம் எங்கு ஏற்படுத்துவது என்பதில் சிக்கல் ஏற்பட்ட போது விசாகப்பட்டிணத்தில் தொடங்குவது என்று சமரசம் செய்து வைத்த சமரசவாதி.

சேது சமுத்திரத் திட்டத்திற்கு அன்றே ரூ. 30 கோடி ஒதுக்கியதும், அவர் பதவி வகித்த காலத்தில் மேட்டூர் அணை கட்டப்பட்டதும், காவிரி ஆற்றில் ஈரோட்டையும் பள்ளிபாளையத்தையும் இணைக்கும் பாலத்தைத் திறந்து வைத்ததும் முனைவர் சுப்பராயன்தான்.

அவர் இந்தோனேஷியா தூதராகப் பணியாற்றிய காலத்தில் அணிசேரா நாடுகளின் மாநாட்டை நேருவின் விருப்பப்படி கூட்டி இந்தியாவின் தலைமைப் பண்பைத் தரணிக்குக் காட்டியதில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. இந்திய அரசின் பிரதிநிதியாக 1948–ல் இலங்கை சதந்திரம் பெற்றபோது இலங்கை சென்று கலந்து கொண்ட பெருமை சுப்பராயனையே சேரும். இந்தியாவிலேயே முதன் முறையாக அரசு ஊழியரை தேர்ந்தெடுப்பதற்கு சென்னை பணியாளர் தேர்வாணையம் அமைத்தவரும் முனைவர் சுப்பராயனே. திருச்செங்கோடு புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமம் அமைக்க உறவினரிடமிருந்து நிலத்தைப் பெற்றுத் தந்த பெருமகன்.

சுப்பராயன் சிறந்த விளையாட்டு வீரர். குறிப்பாக கிரிக்கெட் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். தொடர்ந்து புத்தகம் படிப்பதில் முனைப்பாக இருந்தவர். கிரிக்கெட் சம்மந்தமாக புத்தகங்கள் அனைத்தையும் சென்னை நுங்கம்பாக்கம் விளையாட்டு அரங்கத்தில் உள்ள நூலகத்திற்கு அளித்தார். அதனால் நூலகத்தின் முகப்பில் இன்னும் அவர் பெயர் உள்ளதைக் காணலாம்.

பல சாதனைகள் புரிந்த முனைவர் சுப்பராயன் பெருமையை உணர்ந்து டில்லி

பாராளுமன்றத்தில் சுப்பராயனின் திருவுருவப்படத்தை திறந்ததில் அவர் பெருமை தலைநகர் டில்லியில் அங்கீகரிக்கப்பட்டது நமக்கு மகிழ்ச்சியே.

ஆனால் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்த முதல் தமிழ் முதலமைச்சர் என்ற பெயர் பெற்ற முனைவர் சுப்பராயனுக்கு சென்னைச் சட்டசபையில் அவர் படம் இல்லை. தலைநகர் சென்னையில் அவர் நினைவைப் போற்றும் வகையில் நினைவு மண்டபமோ, உருவச்சிலையோ இல்லாதது தமிழ்மக்களுக்குப் பெரும் தலைகுனிவு ஆகும்.

சுயமரியாதைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியவர். காந்தியக் கோட்பாடுகளை கடைபிடித்தவர். தான் 8 மாதமே தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது தமிழ்நாடு காங்கிரஸ் இயக்கத்திற்காக வாங்கிய நிலங்களைப் (தேனாம்பேட்டை, ராயபுரம் போன்ற இடங்களில் இருப்பவை) பாதுகாக்க ஓர் அறக்கட்டளையை ஏற்படுத்தியவர்.

சாதி மறுப்பாளராக இருந்தும் தான் சார்ந்த இனமக்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் மிகவும் பின்தங்கி இருப்பதைக் கண்டு சேலம் ஜில்லா வேளாளக் கவுண்டர்கள் சங்கத்தை 1931–ல் அமைத்து அதற்கு தன்னைத் தலைவராகவும், கொங்கணாபுரம் நாச்சியப்பக்கவுண்டரைச் செயலாளராகவும் நியமித்தும், சேலத்தில் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு தங்கும் விடுதியை அமைத்தும் தான் சார்ந்த சமுதாயத்திற்குச் சேவை செய்தவர். சாதிகள் இருக்கும் வரை அந்தந்த சாதி தனக்குள்ள உரிமையைப் பெறவும், மேம்பாடு அடையவும் சாதி சங்கங்கள் தேவைதான் என்று கூறியவர். அதன்படிச் செயல்பட்ட இன உணர்வு உள்ள நல்ல மனிதர்.

உழவுத் தொழில் ஒரு ஈனத்தொழில், நீச்ச செயல் என்று சங்கராச்சாரியார் போன்றோர் கூறிய நிலையில் உழவரைச் சிறப்பிக்கும் வகையில் ஏரைப் பிடித்திருக்கும் ஏர் உழவன் படத்தை அஞ்சல் தலையில் வெளியிட்ட பெருமைக்குரியவர் சுப்பராயன்.

பாராளுமன்றத்தில் முதல் பெண்மணியாக நுழைந்த சுப்பராயனின் மனைவி ராதாபாய் சுப்பராயன், பெண்கள் உரிமைக்காகவும், நல் வாழ்விற்காகவும் குரல் கொடுத்த முதல் பெண்மணி என்ற பெருமைபெற்றவர்.

தானும், மனைவியும் காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவராயினும் தன் மகன்கள், மகள் பொதுவுடைமைக் கட்சியில் இருந்தாலும் தேர்தல் நேரத்தில் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பொது மேடையில் பேசினாலும் ஒரே வீட்டில் உண்டு உறங்கி குடும்ப ஒற்றுமைக்கும் பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது சுப்பராயன் குடும்பம். விடுதலைப் போராட்டத்தில் தான், தன் மனைவி, தன் மகள், மகன் அனைவரும் ஒரே நேரத்தில் சிறைசென்ற தியாகக் குடும்பம்.

இவ்வளவு சிறப்புப் பெற்ற மாமனிதர், செயல்வீரர், சாதனையாளர், நேர்மையின் சின்னம், தொலைநோக்கு உள்ள சுப்பராயனுக்குத் தமிழ்நாடு சட்டசபையில் இதுவரை படம் வைக்கவில்லை. இதற்காக சுயமரியாதை எண்ணம் கொண்ட திராவிட இயக்க

சட்டசபை உறுப்பினர்களோ, காங்கிரஸ் உறுப்பினர்களோ சுப்பராயன் சம்பந்திக் கட்சியான பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்களோ, சுயேட்சை உறுப்பினர்களோ, மாதர் சங்கங்களோ, விவசாயச் சங்கங்களோ, கொங்கு வேளாளர் அமைப்புகளோ, தமிழ்ச் சங்கங்களோ ஏன் குரல் கொடுக்கவில்லை? எங்கே போயிற்று தமிழனின் நன்றியுணர்வு?

முனைவர் சுப்பராயன் பற்றி தமிழ்நாடு பாட நூல்களில் அறியும்படி எந்தக் குறிப்பும் இடம்பெறவில்லை. மேலும் தமிழ்ச் சான்றோர்கள், தமிழ்நாட்டுச் சாதனையாளர்கள், தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் என்று பல நூல்கள் வெளிவந்தும் ஒன்றில் கூட முனைவர் சுப்பராயன் பற்றி ஒரு செய்தி கூட இல்லை என்பதைப் பார்க்கும்போது நம் நெஞ்சு கணக்கிறது. புண்ணாகி வலிக்கிறது. இப்படிப்பட்டவரா இவர்? இவருக்கா இப்படிப்பட்ட நிலை என்ற ஏக்கம்தான் இன்று இருக்கிறது.

இருப்பினும் சிறு ஆறுதல். அருட்செல்வர் நா. மகாலிங்கம் ஆதரவில் பூங்குறுநல் அசோகன் அரும் முயற்சியால் பல இடங்களுக்குச் சென்று சேகரித்த குறிப்புகளின் அடிப்படையில் கே. ஜீவபாரதி எழுதிய ‘குமாரமங்கலம் தியாக தீபங்கள்’ என்ற சிறந்த நூலை கொங்குநாடு அறக்கட்டளை வெளியிட்டது நம் நெஞ்சில் ஏற்பட்ட காயத்திற்கு மருந்தாக இருப்பது நமக்கு ஆறுதல். மேலும் கல்வெட்டுத் துறை அறிஞர் புலவர் செ.இராசு அவர்கள் சுப்பராயன் பற்றி ஓர் ஆய்வு நூல் ஒன்றை வெளியிட இருப்பது நமக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. இன்று முனைவர் சுப்பராயன் நினைவாக விழா எடுத்துவரும் திருச்செங்கோடு பெரியவர் டி.எம்.காணியண்ணன் அவர்களுக்கு நாம் நன்றி கூறுவது இங்கு பொருத்தமாகும்.

இறுதியாக நோயுற்ற நிலையிலும் தான் இறப்பதற்கு 4 நாள் முன்பு காந்தி பிறந்த நாளன்று காந்தியின் நினைவு உரை ஆற்ற, தன் மகள் உடல்நலம் கருதித் தடுத்த போதிலும் காந்தியடிகள் நினைவாக தன் சொற்பொழிவை வானொலியில் நிகழ்த்தி விட்டு நிரந்திர ஓய்வு பெற்றார். அவர் அன்று இளைஞர்களுக்கு விடுத்த செய்தியை இன்று நினைவு கூர்வது மிகவும் பொருத்தமே.

“பகவத்கீதையைப் படித்து ஒப்பித்து பரலோகம் போவதைவிட,

விளையாட்டுப் பயிற்சி பெற்று உடலும் உள்ளமும்

நலம்பெற்று, இவ்வுலகிலேயே சொர்க்கத்தைக் காணுவதுதான்

மேல்”

வாழ்க முனைவர் சுப்பராயன் புகழ்! போற்றுவோம் அவர்தம் தூய சமுதாயப் பணியை!

❖❖❖❖❖

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | K. சந்திரசேகர் +2 |
| பிறந்த தேதி | : | 11/06/1977 சனி அதிகாலை 2:10 மணி |
| நட்சத்திரம் | : | ரேவதி பாதம் 2 |
| ராசி | : | மீனம் |
| லக்குணம் | : | மீனம் |
| தந்தை | : | கந்தசாமி |
| தாயார் | : | சரஸ்வதி |
| ஊர் | : | கரூர் |
| உயரம் | : | 5'5'' |
| கல்வி | : | +2 |
| தொழில் | : | பைனான்ஸ் |
| குலம் | : | மணியன் மோகனூர் நவலடியான் |
| போன் | : | 98947 99823, 93671 23977 |
| முகவரி | : | N. கந்தசாமி, No. 50, மொட்டையப்ப கவுண்டர் தெரு,<br>புது குளத்துப் பாளையம் – வெங்கமேடு,<br>கரூர் – 639 006. |

| | | | |
|---|---|---|---|
| ல/கே சந் மா | செ சுக் | குரு சூரி புத | |
| | இராசி | | சனி |
| | | | |
| | | | ரா |

| | | | |
|---|---|---|---|
| ல/கே | | | செ |
| புத | அம்சம் | | குரு சுக் |
| சந் | | | சூரி |
| சனி | மா | | ரா |

**கொங்கு திருமண தகவல் மையம்**

1/6, சக்தி நிலா காம்ப்ளக்ஸ், பைபாஸ் ரோடு, வேலாயுதம்பாளையம் – அஞ்சல்,
கரூர் – மாவட்டம் Ph: 750261781.

❖❖❖❖❖

# மருத்துவம்

**மாணவர்களுக்கு வேர்க்கடலை அவசியம் !**

வேர்க்கடலையில் உள்ள உயிர்வேதிப் பொருட்கள் நரம்பு செல்களை நன்கு செயல்படத் தூண்டும். இதனால் நரம்பு மண்டலத்துடன் தொடர்புள்ள பார்க்கிஸன், அல்ஸமர் போன்ற ஞாபக பறதி நோய்கள் வராமல் தடுக்கும். படிக்கும் மாணவ, மாணவியர் வேர்க்கடலையை தொடர்ந்து சாப்பிடுவதால் ஞாபக மறதி ஏற்படாது எண்கிறார்கள், உணவு ஆய்வாளர்கள். மேலும், நரம்பு சம்பந்தமான நோய்களை வராமல் தடுக்கும் ஆற்றலும் வேர்க்கடலைக்கு உண்டு.

வேர்க்கடைலையில் 30 விதமான ஊட்டச் சத்துக்கள் உள்ளன. இதில் புரதம் அதிகம். வேர்க்கடலையில் மேல் இருக்கும் தோலில் அதிக சத்துக்கள் உள்ளதால் அதனை நீக்காமல் சாப்பிடுவது அவசியம்.

நாம் உண்ணும் உணவுப் பொருட்களில் இருந்து ரத்தத்தில் சேரும் சர்க்கரையின் அளவை 'கிளை செமிக் இன்டெக்ஸ்' என்பார்கள். இது வேர்க்கடலையில் மிகவும் குறைவு என்பதால் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிக்காது. மேலும், வேர்க்கடலையின் மேல் உள்ள பிங்க் கலர் தோலுக்கு நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உண்டு. அதுமட்டுமின்றி, வேர்க்கடலையில் உள்ள மெக்னீசியத்திற்கு இன்சுலின் சுரக்கும் ஹார்மோன்களைத் துரிதப்படுத்தும் சக்தி உள்ளது.

கர்ப்பிணிகள் வேர்க்கடலையைச் சாப்பிடுவதால், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு நரம்புக் கோளாறுகள் ஏற்படாது. வேர்க்கடலையில் கர்ப்பிணிப் பெண்களுக்கு மிகவும் அவசியமான வைட்டமின் ஏ மற்றும் நீரில் கரையக்கூடிய வைட்டமின் பி3 போன்றவை அதிகம் உள்ளன.

ரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தும் சோடியம் வேர்க்கடலையில் குறைவு. இதனால் வேர்க்கடலை சாப்பிடுவதால் ரத்த அழுத்தம் அதிகரிக்காது. இதில் நார்ச்சத்து அதிகம் என்பதால் மலச்சிக்கல் எற்படாது. வேர்க்கடலையில் ஆன்டி ஆக்ஸிடென்ட்ஸ் இருப்பதால் உடலில் உள்ள தேவையில்லாத கழிவுகளை வெளியேற்றிவிடும். தினமும் 50 கிராம் வேர்க்கடலை அவித்து அல்லது வறுத்து சாப்பிடவும். எண்ணையில் பொரித்து சாப்பிட வேண்டாம்.

**தேநீர் அருந்துங்கள் !**

தேநீர் அருந்துவது நல்லது என்று கூறுகின்றனர் உணவு ஆராய்ச்சியாளர்கள். ஆனால் தேநீர் சுத்தமான தேயிலையில் தயாரிக்கப்பட்டதாக இருப்பது நல்லது. தேயிலையில் இருக்கும் 'காபின்' என்ற பொருள் நரம்பு மண்டலத்தின் செயலை ஊக்குவிக்கிறது.

'கீரீன் டீ' என குறிக்கப்படும் தேயிலை தற்போது அழகு சாதனப் பொருட்களில் பங்கு வகிக்கின்றது. தேயிலையில் வைட்டமின்கள், தாது உப்புகள் மற்றும் நோயைத் தடுக்கக் கூடிய 'ஆன்டி ஆக்ஸிடென்டுகள்' உள்ளன. மூளையை ஊக்கப்படுத்துதல், ஞாபக சக்தி, இளமையைத் தக்க வைத்தல், ஆரோக்கியம் ஆகியவை தேயிலைக்கு உரிய குணங்கள். பற்சிதைவு போன்ற பல் தொடர்பான நோய்களைத் தடுக்கும் வைட்டமின் சி,டி,கே மற்றும் ப்ளோரைடுகள் ஆகியவை இதில் அதிகம் உள்ளன.

❖❖❖❖❖

## ஊட்டச்சத்து உணவுகள்

### பிரட்கட்லெட்

**தேவையானவை** :

| | |
|---|---|
| பிரட் | – ஒரு பாக்கெட் |
| உருளைக்கிழங்கு | – கால்கிலோ |
| பச்சை மிளகாய் | – 4 |
| உப்பு | – தேவைக்கேற்ப |
| கறிவேப்பிலை | – தேவைக்கேற்ப |
| இஞ்சி | – சிறிய துண்டு |
| எண்ணை | – 200 மி.லி. |
| கடுகு | – கால் தேக்கரண்டி |
| சீரகம் | – கால் தேக்கரண்டி |
| கரம் மசாலாத்தூள் | – அரை தேக்கரண்டி |

**செய்முறை :**

உருளைக்கிழங்கை வேகவைத்து, தோலுரித்த பின் மசித்துக் கொள்ளவும். வாணலியில் சிறிதளவு எண்ணையைக் காய வைத்து, அதில் கடுகு மற்றும் சீரகத்தைப் போட்டு வெடிக்க விடவும். வெடித்ததும் கறிவேப்பிலை, பொடியாக நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி சேர்த்து நன்கு வதக்கவும். இத்துடன் மசித்து வைத்திருக்கும் உருளைக் கிழங்கைச் சேர்த்து 5 நிமிடம் வேகவிடவும். பிரட்டின் ஓரங்களை

### கேரட்சாதம்

**தேவையானவை** :

| | |
|---|---|
| அரிசி சாதம் | – 2 கப் |
| கேரட் துருவல் | – 2 கப் |
| பச்சை பட்டாணி | – கால் கப் |
| எலுமிச்சை சாறு | – 2 மேஜைக்கரண்டி |
| உப்பு | – தேவைக்கேற்ப |
| மஞ்சள்தூள் | – கால் தேக்கரண்டி |
| கொத்தமல்லித்தழை | – சிறிதளவு |
| இஞ்சி | – சிறிதளவு |
| பச்சை மிளகாய் | – 4 |
| கறிவேப்பிலை | – சிறிதளவு |
| கடுகு | – அரை தேக்கரண்டி |
| உளுந்து | – அரை தேக்கரண்டி |
| எண்ணை | – தேவைக்கேற்ப |

**செய்முறை :**

வாயகன்ற பாத்திரத்தில் எண்ணையைக் காயவைத்து, அதில் கடுகு, உளுந்து போட்டு வெடிக்கவிடவும். வெடித்ததும் பொடியாக நறுக்கி வைத்திருக்கும் இஞ்சி, கொத்த மல்லித்தழை, பச்சை மிளகாய், கறிவேப்பிலை சேர்த்து வதக்கி, அதனுடன் வேகவைத்த பச்சை பட்டாணி, துருவிய கேரட், உப்பு,

நீக்கியபின், அதன்மேல் உருளைக்கிழங்கு கலவையை வைத்து மடித்ததும், பிரட்டின் ஓரங்களை பிரட் தூளில் ஒற்றியெடுக்கவும். இதை தோசைக்கல்லில் போட்டு இரண்டு பக்கமும் பொன்னிற மாகும் வரை பொரித்து எடுக்கவும்.

**ஊட்டச்சத்து விவரங்கள் :**

பிரட்டில் இருந்து உடனடி சக்தி கிடைக்கிறது. உருளைக்கிழங்கில் செய்வதால் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவர். குழந்தைகளுக்குத் தேவையான கலோரிகள் உருளைக் கிழங்கில் மிகுந்துள்ளன. இதில் சேர்க்கப்படும் இஞ்சி, ஜீரண சக்தியைத் தூண்டுகிறது. வெங்காயம், நோய் எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கிறது. இதை மாலை நேரச் சிற்றுண்டியாக 3 வயதிலிருந்து குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

எலுமிச்சை சாறு, மஞ்சள்தூள் ஆகியவை சேர்த்து நன்கு வதக்கவும். பின்னர் ஏற்கனவே தயாராக வைத்திருக்கும் சாதத்தை இதில் கொட்டிக் கிளறிப் பரிமாறலாம்.

**ஊட்டச்சத்து விவரங்கள் :**

கேரட்டில் உள்ள 'வைட்டமின் ஏ', குழந்தைகளின் கண் பார்வை சக்தியை அதிகரிக்கிறது. பச்சைப் பட்டாணியில் புரதம் மிகுந்திருப்பதால், குழந்தைகளின் உடல் வளர்ச்சி தூண்டப்படுகிறது. இதில் சேர்க்கப்பட்டுள்ள இஞ்சி, ஜீரண சக்தியைத் தூண்டுகிறது. இந்தச் சாதத்தை 5 வயது முதல் சாப்பிடக் கொடுக்கலாம். மதிய உணவாகக் கொடுத்தனுப்ப ஏற்ற உணவு இது.

❖❖❖❖❖

## வர்த்தகச் செய்திகள்

- கடந்த 2009–ம் ஆண்டு டிசம்பர் 31–ம் தேதி அன்றுள்ளபடி, இந்திய வங்கிகளில் உரிமை கோரப்படாத நிலையில் ஆயிரத்து 360 கோடி ரூபாய் உள்ளது. (டிசம்பர் 5)
- நடப்பு ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியாவுக்கு வருகை தந்த வெளிநாட்டு சற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 14.7 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனால் அன்னியச் செலாவணி வருவாயில் 18 சதவீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. (டிசம்பர் 6 )
- பயன்பாடு அதிகரித்து வருவதால் 2011–ம் ஆண்டில் நாட்டில் கம்ப்யூட்டர்களின் விற்பனை 25 சதவீதம் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (டிசம்பர் 7)
- நடப்பு நிதியாண்டின் முதல் 8 மாதங்களில் நாட்டின் நேரடி வரிவருவாய் ரூ.2.17 லட்ச கோடியாக உயர்ந்தது. (டிசம்பர் 8)

❖❖❖❖❖

## கீரைகளின் அரசன்

எல்லா இடத்துலவும் கிடைக்குற முருங்கைக் கீரையைத் தான் 'கீரைகளின் அரசன்'னு அழைக்கிறாங்க. முருங்கை மரத்தோட ஒரு துண்டை வெட்டி நட்டு வச்சி தண்ணி ஊத்துனா போதும். அதுபாட்டுக்கு வளர்ந்துக்கிட்டே இருக்கும். உரம் போட வேண்டியதில்லை. பூச்சி மருந்து அடிக்க வேண்டிய அவசியமில்லை. முருங்கை இலை, காய், விதை, பூ என அனைத்து பாகங்களுமே பல்வேறு பயன்களைத் தரும்.

முருங்கையைப் போல எல்லா நோய்களையும் தீர்க்கும் சக்தி, வேறெந்த கீரைக்கும் கிடையாது. அதனால் தான் இதை 'சர்வரோக நிவாரணி' அப்படின்னு சித்த மருத்துவர்கள் குறிப்பிடுறாங்க. இதுல நார்ச்சத்து, புரதச்சத்து, கண்ணாம்புச்சத்து, இரும்புச்சத்து போன்றவைகளும், வைட்டமின்களும் அதிகமா இருக்குது. உடல் பலவீனம், கருப்பைக் கோளாறுகள், எலும்பு மற்றும் நரம்பு தொடர்பான நோய்களை முழுமையா குணப்படுத்துற சக்தி முருங்கைக் கீரைக்கு உண்டு.

முருங்கைக் கீரையை அரைத்து தலையில் தேய்த்துக் குளித்தால் உடல் சூடு தணியும்; பொடுகுப் பிரச்சினையும் இருக்காது. ஒரு கைப்பிடி முருங்கைக் கீரையுடன் 10 மிளகு சேர்த்து அரைத்து, தொடர்ந்து 15 நாட்கள் சாப்பிட்டு வந்தால் ரத்தச் சோகை நோய் குணமாகும். பூண்டு, உப்பு, மஞ்சளுடன் முருங்கைக் கீரையை சமைத்துச் சாப்பிட்டால் வாயுக்கோளாறுகள் சரியாகும். முருங்கைக் கீரைச் சாற்றில் சீரகத்தை ஊறவைத்து, உலர்த்திப் பொடியாக்கி, தினமும் இரண்டு வேளை 2 கிராம் அளவுக்குத் தேனில் குழைத்துச் சாப்பிட்டால் இதய நோய்கள், ரத்த அழுத்தம் போன்றவை குணமாகும். இனிமே வாரத்துல ஒரு நாளாவது கண்டிப்பா முருங்கைக் கீரை சாப்பிடுங்க சுட்டீஸ்!

❖❖❖❖❖

## கேள்விகள்

1 சென்னை மத்தியச் சிறைச்சாலை கட்டப்பட்ட ஆண்டு எது?
2 'ஆசியாவின் நோபல்' பரிசு என்று அழைக்கப்படும் விருது எது?
3 'சீதக்காதி நொண்டி நாடகம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
4 ஊனமுற்றோர் ஒலிம்பிக் போட்டி முதன்முதலில் எங்கு நடைபெற்றது?
5 தமிழ்நாட்டில் 'சிப்பாய்க்கலகம்' நடைபெற்ற இடம் எது?
6 தமிழ் இலக்கியங்களில், 98 பூக்களை வரிசைப்படுத்திச் சொல்லும் இலக்கியம் எது?
7 பாட்டிலுக்குப் பதிலாக பிளாஸ்டிக் கவரில் பாலை விற்பனை செய்யும் முறையை அறிமுகப்படுத்திய நாடு எது?
8 செம்பும், துத்தநாகமும் கலந்த உலோகத்திற்கு என்ன பெயர்?
9 சூயஸ் கால்வாய் எந்த ஆண்டு திறக்கப்பட்டது?

விடைகள் : 24 வது பக்கம்

❖❖❖❖❖

# கிராமத்தின் கதை

கொங்கு மாமணி மூத்த வழக்கறிஞர் இரா. காந்தி
தலைவர், பாரதியார் சங்கம்

கிளாம்பாடி, மறக்க முடியாத குக்கிராமம் :

72 ஆண்டு காலமாக மறக்க முடியாமல் என் உள்ளத்தில் எப்பொழுதும் நினைவில் இருக்கின்ற ஒரு குக்கிராமம் தான் கிளாம்பாடி. அது என்னைப் பெற்ற அன்புத் தாயாரின் பிறந்த ஊர். பல நூற்றுக்கணக்கான கிராமங்களைப் பார்த்திருந்தாலும் கிளாம்பாடியைப் போன்ற அழகான கிராமத்தை, நான் பார்த்ததில்லை. எனது பெரியப்பாவுக்கும், எனது தந்தைக்கும் அக்காள் தங்கையைத் திருமணம் செய்தார்கள். அது ஒரு நாகரிகம் கொஞ்சிய ஊர். இசை என்பதே என்ன என்று அறியாத அந்தக் காலத்தில் எனது தாய்க்கும் எனது பெரியம்மாவுக்கும் ஹார்மோனியப் பெட்டி வைத்து பாட்டு சொல்லிக் கொடுத்தார்களாம். அந்த ஊரிலே பெரிய குடும்பங்கள் ஐந்து, ஆறு இருக்கும். அத்தனை வீடுகளிலும் மாடி கட்டப்பட்டிருக்கும். அழகான குண்டு குண்டு விளக்குகள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும். ஐந்தாம் ஜார்ஜின் முடியேற்று விழா படங்கள் அவர்கள் வீட்டிலே இருக்கும். மிக துரதிஷ்டவசமாக என் தாயாரின் தந்தை காலமானார். எனக்கு நான்கு வயது இருக்கும் பொழுதே எனது தாயாரும் கடுமையான புற்றுநோயால் மரணம் அடைந்துவிட்டார். ஆதலால் எங்களுக்குப் பாட்டி வீடு ஒரு சொர்க்க பூமி. அந்த ஊரிலிருந்த அனைவரும் எங்கள் மேல் அன்பைப் பொழிந்தார்கள்.

அந்த ஊர் மணியக்காரர் வீட்டு தாத்தாவும், பாட்டியும் மிக அற்புதமான மனிதர்கள். அவர்கள் பார்ப்பதற்கே தெய்வீகமாக இருப்பார்கள். அவர்கள் வீட்டிற்கு முன்னால் பெரிய பவளமல்லி மரங்கள் இருக்கும், அவைகள் பூத்துக்குலுங்கும். வாசல் முழுவதும் மலர்களாகவே கிடக்கும். எங்கள் தாயாரின் தந்தையார் அந்த ஊர் மணியக்காரராக இருந்தார்கள். அப்பொழுதெல்லாம் அந்த ஊர் நடுவிலே இருக்கின்ற மிக பெரிய வேப்ப மரத்தடியிலே அமர்ந்து நிலவரிகளையெல்லாம் வசூல் செய்து ஒரு சிறு மூட்டையாகக் கட்டி அங்கே இருக்கின்ற ஒரு கோயிலிலே உள்ள சிறு கூண்டிலே வைத்துவிட்டு வந்துவிடுவார்கள். யாரும் அந்தப் பணத்தைத் தொடமாட்டார்கள். பணம் வைத்தது வைத்தபடியே இருக்கும். அப்புறம் அதை எடுத்துக்கொண்டு போய் ஜமாபந்தியில் கட்டி விடுவார்கள். இப்படி ஊர் மக்கள் ஒன்றுபட்டு தர்மத்துக்கும், நீதிக்கும் கட்டுப்பட்டு மற்றவர்களுக்கு முன் உதாரணமாக இருந்தார்கள்.

அந்த வேப்பமரத்திற்கு நேர் பின்னால் அந்த மணியக்காரர் மாமா செங்கோட்டைய கவுண்டர் இளைப்பாறும் பங்களா இருக்கும். நடுவிலே ஓர் அழகான கோடைவாசல் தளம்; சுற்றிலும் பெரிய விராண்டா. ஏறத்தாழ ஓர் ஏக்கர் இருக்கும். அவை அழகிய சிகப்பு நிறங்களில் பூத்துக் குலுங்கும். பார்ப்பதற்கே மிக மிக ரம்மியமாக இருக்கும். நான் எனது நண்பர்களுடன் அந்த மரங்களைச் சுற்றிச் சுற்றி விளையாடிய ஞாபகங்கள் பசுமையாக இருக்கின்றன. இளைப்பாறவும், ஒய்வெடுப்பதற்காகவும் கட்டப்பட்ட அந்த இடத்தைப் போல் வேறு எந்தக் கிராமத்திலும் பார்த்ததில்லை.

அதற்கு பக்கத்தில்தான் கிளாம்பாடி பண்ணைக்காரர் வீடு. அதுவும் ஒரு பெரிய வீடு. கிட்டுமணி மாமா குடும்பத்தோடு அங்கு இருந்தார்கள். அந்த வீட்டின் மேலே அழகான கண்ணாடி விளக்குகள் பல வண்ணங்களில் இருக்கும். அவர்களும் எங்களோடு மிக மிக அன்புடன் பழகுவார்கள். அங்கேயே சில நேரங்களில் உணவு அருந்திவிட்டு வந்துவிடுவோம்.

எங்களுடைய தாயாருடைய ஒன்றுவிட்ட சகோதரர்கள் முத்து மாமாவும், செங்கப்ப மாமாவும் அவருடைய குழந்தைகள் கைலாசம், (பின்னாளில் நெய்வேலியில் இஞ்சினியராகப் பணியாற்றினார்), பழனிசாமி ஆகியோர் எங்களுடன் மிக மிக அன்போடும், பாசத்தோடும் பழகக்கூடியவர்கள். பழனிசாமி என்னைவிட மூத்தவர். அவரும் அவருடைய தம்பியும்தான் எனது வயது ஒத்த நண்பர்கள். அவர்களுக்குத் தொண்டுபட்டியலில் நிறைய மாடுகள், எருதுகள் இருக்கும். அவர்களது வண்டியில் ஏறிக் கொண்டு, வயல் வெளிகளுக்குச் செல்வதும், அங்கே வாய்க்கால்களில் குதித்து விளையாடுவதும் இனிமையான அனுபவங்கள்.

சுந்தரம் மாமா என்று ஆஜானுபாவான மாமா. எங்கும் காணமுடியாத மிக அற்புதமான மனிதர். இசையிலே வல்லவர். மைசூர் சவுடைய்யா போன்ற மிகப் பெரிய வயலின் வித்வான்கள் அவருக்கு நண்பர்கள். அவரைப் போன்ற பல வித்வான்கள் அவரது வீட்டிலே வந்து தங்குவார்கள். அவர்கள் பாடுவதையும் வாசிப்பதையும் கேட்டு சுந்தரம் மாமா மிகவும் ரசிப்பார்கள். இப்படி கிராமப்புறக் கவுண்டர் வீட்டில் இசை வல்லுனர்கள் வந்து தங்குவது வேறு எந்தக் கிராமத்திலும் நடக்காத அதிசயம். ஈரோட்டில் நடக்கக் கூடிய கச்சேரிகளில் முன் வரிசையிலே அமர்ந்து ரசிக்கக்கூடிய கலா ரசிகன். பனை ஓலையில் மிக அழகாக விசிறி செய்யக் கூடிய ஆற்றல் பெற்றவர். அவருடைய சகோதரிகளைப் போல என் சகோதரியிடமும் மிகுந்த பாசத்தைப் பொழிகின்றவர்கள்.

எழுபது ஆண்டுகள் ஆனாலும் அந்த ஊருக்குப் போய் ஐம்பது, அறுபது ஆண்டுகள் ஆகிவிட்டாலும், அந்த இளம் நாட்களிலும் அந்த அழகான ஊரைச் சுற்றி வந்த பசுமையான நினைவுகள் இன்றும் என்னை விட்டு அகலுவதில்லை. எனது தாயாரின் ஒன்றுவிட்ட சகோதரியின் மகன் T.K. ராஜேஸ்வரன் மிகப் புகழ் பெற்ற திருச்செங்கோடு T.M.காளியண்ணன் அவர்களுடைய மகன். சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக்கறிஞராக இருந்தார். அவருக்கும் கிளாம்பாடி தான் பாட்டி வீடு. அவரைச் சந்திக்கும் பொழுதெல்லாம் கிளாம்பாடியின் அழகை சொல்லிச் சொல்லி மகிழ்வேன். அவர் என்னிடத்தில் பலமுறை இந்த அழகிய நினைவுகளை தயவு செய்து பதிவு செய்து வையுங்கள் என்று சொல்லுவார். இன்று தான் அதற்கு ஒரு காலம் வந்திருக்கிறது. அழிக்க முடியாத அந்த கிளாம்பாடியின் நினைவுகளை எழுதி வைக்கிறேன்.

(குறிப்பு : சங்க உறுப்பினர்கள் தங்கள் ஊர்ப் பெருமை மற்றும் அனுபவங்களை எழுதி அனுப்ப வேண்டுகிறோம்)

(கட்டுரையாளர் சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவர். தலைவர் பொறுப்பில் இருந்தவர்.)

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



சென்னை மேற்கு தாம்பரம் வீ.எஸ்.புளு மெட்டல்ஸ், வைரமணி டிரான்ஸ்போர்ட்ஸ் உரிமையாளர் திரு. கே. சுப்பிரமணியம் – திருமதி S. வைரமணி ஆகியோர் புதல்வன் செல்வன் K.S. ராம்மோகன், B.E., M.B.A., – திருச்செங்கோடு கொல்லப்பட்டி பைனான்சியர் திரு. S.S. கிருஷ்ணன் – திருமதி K. பழனியம்மாள் ஆகியோர் புதல்வி K. சுபா, M.Sc., ஆகியோர் திருமணம் 18–11–2010 அன்று ஈரோடு ஒயாசிஸ் உணவு விடுதி மஹேஸ்வரி மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 21–11–2010 அன்று சென்னை குரோம்பேட்டை ஆனந்தா திருமண மாளிகையில் திருமன வரவேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் K.S. ராம்மோகன் – R. சுபா அனைத்து வளங்களும் பெற்று சிறப்புடன் வாழ சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



சென்னை மேற்கு தாம்பரம் P.S.K. புளு மெட்டல்ஸ், ஸ்ரீ பாலாஜி டிரான்ஸ்போர்ட்ஸ், ஸ்ரீ பாலாஜி எர்த்மூவர்ஸ் உரிமையாளர் திரு. P. சதாசிவம் – தெய்வத் திருமதி S.கலைவாணி ஆகியோரின் புதல்வன் செல்வன் S. பாலாஜி, B.E., பரமத்திவேலூர் வட்டம் நல்லூர் கந்தம் பாளையம் கரிச்சிக்காடு மிராஸ்தார் திரு. P. சுப்பரமணியன் – திருமதி S. வசந்தி ஆகியோர் புதல்வி செல்வி S. கோமதி, B.E., ஆகியோர் திருமணம் 18–11–2010 அன்று திருச்செங்கோடு செங்குந்தர் திருமண மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

புது மணமக்கள் திரு. S. பாலாஜி – திருமதி கோமதி எல்லா வளமும் பெற்று சிறப்புடன் வாழ்ந்திட சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்

சேலம் வட்டம், மகுடஞ்சாவடி கிராமம் திரு. P. சின்னண்ண கவுண்டர்–திருமதி பெருமாயியம்மாள் ஆகியோரின் மகனும், நமது சங்கத்தின் மூத்த உறுப்பினருமான திரு. சி. பிரகாசம், B.E., அவர்கள் தலைமைப் பொறியாளராக சென்னைக் குடிநீர் வாரியத்தில் (Chief Engineer, Chennai Metropolitan Water Supply and Sewerage Board) பதவி உயர்வு பெற்றுள்ளார் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இவர் தூரன் குலத்தைச் சார்ந்தவர். இவரது மனைவி திருமதி விஜயம். மகள் திருமதி உமா பொறியாளர். மருமகன் திரு. K. முருகேசன், M.C.A., Software துறையில் உள்ளார். மகன் P. பிரேம் பிரசன்னா, B.E., Infosys நிறுவனத்தில் பணிபுரிகிறார்.

இப்புதிய பதவியில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு, சாதனைகள் பல படைத்திட சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

❖❖❖❖❖

## விடைகள்

1. 1838
2. மகசேசே விருது
3. உமறுப்புலவர்
4. ரோம்
5. வேலூர்
6. குறிஞ்சிப்பாட்டு
7. பிரான்ஸ்
8. பித்தளை
9. 1869

❖❖❖❖❖

“பிறர் முதுக்குப்பின்னால் நாம் செய்ய வேண்டிய வேலை
தட்டிக்கொடுப்பது மட்டும்தான்.”

– விவேகாந்தா

வாங்கிவிட்டீர்களா.....?

# கொங்கு வேளாளர் வரலாறு

117 தலைப்புகளில் 480 பக்கங்களில் கொங்கு நாட்டின் இயற்கை வளம், அரசியல் பிரிவுகள் ஆட்சியாளர்கள் கலை இலக்கியங்கள், திருத்தலங்கள் மற்றும் இம் மண்ணின் மைந்தர்களாகிய கொங்கு வேளாள கவுண்டர்களின் உட்பிரிவுகள் கூட்டங்கள் (குலங்கள்) குலதெய்வங்கள் வரலாற்றுடன் அவர்களின் அனைத்து வகையான சீர் சடங்குகள் அவற்றிற்கான காரணங்கள் ஆகியவற்றுடன் பொன்னர் சங்கர், தீரன் சின்னமலை வரலாறு அடங்கியது. கெட்டி அட்டை ரூ. 270 மட்டுமே.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் அருளிய

## கம்பர் வாழி &
## கொங்கு மங்கல வாழ்த்து

ஆடியோ சி.டி



கொங்கு வேளாளர்களின் அனைத்து வகை திருமண சீர்சடங்குகளையும் இனிய தமிழில் எடுத்து இசைக்கும் கொங்கு மங்கள வாழ்த்தும் மணமக்களை வாழ்த்தியருளும் கம்பர் வாழி கொங்கு இல்லந்தோறும் இசைக்கவேண்டிய மங்கள இசைகள் விலை ரூ. 99.

DISCOUNT

**கொங்கு வேளாளர் வரலாறு**

**+ ஆடியோ சி.டி விலை ரூ. 333 /**

2011 ஜனவரி 4 முதல் 17 வரை சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலை பச்சையப்பா கல்லூரி எதிரில் உள்ள புனித ஜார்ஜ் ஆங்கிலோ இலக்கியமேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.34 வது சென்னை புத்தகத் திருவிழாவில் அரங்கு எண். 311 -ல் புத்தகமும், சி.டியும் தள்ளுபடி விலையில் ரூ. 333 /- க்கு கிடைக்கும்.

**அரங்கு எண். 311**

**பல்லவி பதிப்பகம் (தென்னிந்தியா பி.லிட்.,)**

194, கண்ணா காம்ப்ளக்ஸ், மேட்டூர் சாலை, ஈரோடு - 11.

போன் : 0424 -2263197,2265197, அலை பேசி : 94422 51549
98430 87561

Email : pallavipublications@gmail.com